

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றியம் விளத்துப்பட்டியில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப.சரவணன், பொதுக்குழு உறுப்பினர் ராப்பூசல் எம்.செந்தில்குமார், அரசு வழக்கறிஞர் பூங்குடி சிவா, பொன்.பாரிவள்ளல், சொதமிழினியன், மழவராயன்பட்டி கார்த்தி, பி.வி.எஸ்.பாண்டியராஜா, கிட்டு, ஆர்.ஆர்.எஸ்.எம்.ராஜேஷ், ஜெ.வெங்கடாசலம் உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

## ‘‘தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்’’!

# தஞ்சை வடக்கு மாவட்டம் முழுமைக்கும் சுவர் விளம்பரம் செய்வீர்!

### மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், ஏப்.5-
தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க பாசிஜ பா.ஜ.க ஒன்றிய அரசின் மக்கள் விரோத போக்கை மக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் தஞ்சை வடக்கு மாவட்டம் முழுமைக்கும் சுவர் விளம்பரம் செய்திட கழக தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

தமிழ்நாடு மட்டுமின்றி ஒட்டுமொத்த தென் மாநிலங்களின் குரலை நசுக்கும் முயற்சிதான் தொகுதி மறுசீரமைப்பு என்பது ஒட்டுமொத்த நாடாளுமன்றத்தில் 7.18% உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் போதே தமிழ்நாட்டின் உரிமைகளைப் பெற நாம் போராட வேண்டியிருக்கிறது. தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் நமது அரசியல் பிரதி நிதித்துவம் குறைந்தால் ஒன்றிய அளவில் முற்றிலும் நமது குரல் நசுக்கப்படும் என்பதை உணர்ந்து நம் தலைவரின் பின்னால் பல்வேறு மாநில அரசுகளும் கட்சிகளும் அணிதிரண்டுள்ள செய்தியையும் மக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் வகையில் மாநகர, ஒன்றிய, பேரூர், மாநகர பகுதி வட்ட கழகங்களில் சுவர் விளம்பரங்களை குறிப்பாக தேசிய மாநில நெடுஞ்சாலைகளிலும் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் அமைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. இந்தித் திணிப்பு நிதிப்பகிர்வில் பாரபட்சம் மற்றும் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இவற்றை எதிர்த்து தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்!

2. வேண்டாம் வேண்டாம் தொகுதி மறுசீரமைப்பு வேண்டாம்.

3. தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம்.

4. தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுப்பட்டு போராடுவோம்.

#FairDelimitation தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்!

என்ற வரிகள் விளம்பரங்களில் கட்டாயம் இடம் பெறும் வகையில் அமைத்திட கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர் தங்ளது பகுதிகளில் செய்யப்பட்டுள்ள சுவர் விளம்பரங்களை புகைப்படம் எடுத்து மாவட்டக் கழகத்திடம் வழங்கிடவும் கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# கரும்பு டன்னுக்கு ரூ.4000 வழங்க நடவடிக்கை!

### சட்டப்பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!

சென்னை, ஏப்.5-
சட்டப்பேரவையில் வேளாண் துறை மானியக் கோரிக்கையின் மீது பதிலுரையின் போது அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளித்து பேசுகையில், அடுத்த சீசனுக்கு கரும்புக்கு டன் 4000 வழங்க முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்று கூறினார்.



இது குறித்து பேரவையில் நடந்த விவாதம் வருமாறு:-

**எடப்பாடி கே. பழனிசாமி:** 2021 சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது, திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலே வெளியிடப்பட்டிருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்குஒருகுவிண்டாலுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். இன்னும் வழங்கப்படவில்லை. அதேபோல, ஒரு மெட்ரிக் டன் கரும்பிற்கு ஆதார விலையாக 4,000 வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்கள். அதுவும் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டாவது வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகஅறியவிரும்புகிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இப்போது நெல்லுக்கு 2,050 தான். வருகிற SEASONல் அது 2,500 ஆக வழங்குவதற்கு முன்பே ORDER கொடுத்து விட்டார்கள். இன்னும் அதுமட்டும்தான் குறைவிருக்கிறது. செப்டம்பர் மாதம், வருகிற SEASONல் அது மறுபடியும் ரூ.2,500 நெல்லுக்குக் கொடுத்துவிடுவார்கள். கரும்பைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ரூ.3,500 ஆக இருக்கிறது. இப்போது, தருமபுரியில் பார்த்தால் கிட்டத்தட்ட அதே விலையேற்றம் வரும்போது டன் ரூ.4,000 வந்துவிட்டது. இருந்தாலும் வருகின்ற அடுத்த SEASONக்கு கண்டிப்பாக கரும்பு டன்னுக்கு ரூ.4,000 வழங்கக்கூடிய, முதல்வர் அவர்கள் வழங்குவார்கள்.

## பேராவூரணி – சேதுபாவாசத்திரம்–

# புதுப்பட்டினம் கடற்கரையை சுற்றுலாத் தலமாக அறிவித்திடுவீர்!

### சட்டப் பேரவையில் – என்.அசோக்குமார் கோரிக்கை!

சென்னை, ஏப்.5-
சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, பேராவூரணி தொகுதி கழக உறுப்பினர் என். அசோக்குமார் “பேராவூரணி தொகுதிக்குட்பட்ட புதுப்பட்டினம் கடற்கரையை சுற்றுலாத்தலமாக அறிவித்திட வேண்டும்’’ என கோரிக்கை விடுத்துள்ளார்.

கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**என்.அசோக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி சேதுபாவா சத்திரம் கடற்கரையில் அமைந்துள்ள அழகிய கடற்கரையான புதுப்பட்டினம் கடற்கரைக்கு தினந்தோறும் 2,000 பேர் வருகை தந்து, அந்தக் கடற்கரையில் நின்று அழகை ரசிக்கின்றார்கள். அதனைச் சுற்றுலாத் தலமாக மாற்றித் தரப்படுமா?



**அமைச்சர் இரா. இராஜேந்திரன்:** புதுப்பட்டி னம் கடற்கரைக் குறித்து, சுற்றுலாத் துறையின் சார்பிலே ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுகுறித்து, தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டி ருக்கிறது. நிதிநிலைக்கேற்ப உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## ஸ்டார்ட் – அப் இந்தியா திட்டத்தின் கீழ் இதுவரை

# தமிழ்நாட்டில் பதிவான புத்தாக்கத் தொழில்கள் எவ்வளவு?

### மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஏப். 5 -
‘ஸ்டார்ட்- அப் இந்தியா’ திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இதுவரை பதிவான புத்தாக்கத் தொழில்கள் எவ்வளவு என்றும், நிதி உதவி பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறித்தும் மக்களவையில் திருவண்ணாமலையில் தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் தெரிவிக்க விரும்புவாரா:

(அ) தமிழ்நாட்டில் ஸ்டார்ட்அப் இந்தியா திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த ஸ்டார்ட்அப்களின் எண்ணிக்கை;

(ஆ) ஸ்டார்ட்அப்களின் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள்;

(இ) வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் திட்டத்தின் தாக்கம் குறித்து ஏதேனும் மதிப்பீடு நடத்தப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள்,

(ஈ) ஸ்டார்ட்அப்களுக்கான நிதி (FFS) மற்றும் ஸ்டார்ட்அப் இந்தியா விதை நிதி திட்டம் (SISFS) ஆகியவற்றின் கீழ் நிதியுதவி பெற்ற ஸ்டார்ட்அப்களின் எண்ணிக்கை;



(இ) இந்தத் திட்டங்களின் கீழ் நிதி பெற்ற ஸ்டார்ட்அப்களால் உருவாக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை;

(எஃப்) ஸ்டார்ட்அப்களால் துறை வாரியாக வேலைவாய்ப்பு உருவாக்கம் குறித்த தரவு ஏதேனும் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும்

(ஜி) ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்பின் மூலம் வேலைவாய்ப்பு வாய்ப்புகளை மேலும் மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்?

இவ்வாறு அவர் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய வணிகம் மற்றும் தொழில் துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதா அளித்துள்ள பதிலில் தமிழ்நாட்டில் இவ்வாண்டு ஜனவரி வரை 10,814 புத்தாக்க தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, 1 லட்சத்து 13 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு, இதர கேள்விகளுக்கு விரிவாகப் பதிலளித்துள்ளார்.

## தமிழ்நாட்டின் மேற்கு மண்டலம்

# ஈரோட்டில் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் அமைத்திடுக!

### மக்களவையில் ஈரோடு தொகுதி கே.இ.பிரகாஷ் கோரிக்கை!

புதுடெல்லி, ஏப்.5-
தமிழ்நாட்டின் மேற்கு மண்டலம் ஈரோட்டில் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் அமைந்திட வேண்டும் என்று ஈரோடு தொகுதி மக்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து கே.இ.பிரகாஷ் பேசியதாவது:-

தமிழ்நாட்டில் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் IITசென்னையிலும் நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி NIT நிறுவனம் திருச்சியிலும் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள IIT மற்றும் NIT இந்தியாவின் முதன்மையான பொறியியல் நிறுவனங்களில் ஒன்றாகும்.



சென்னை போன்ற நகரங்களில் உள்ள IIT உலக தரம் வாய்ந்த கல்வி அணுகுவதற்கு தமிழ்நாட்டின் மேற்கு மண்டலம் ஈரோட்டில் இருந்து நீண்ட தூரம் சுமார் 400 Kms பயணிக்க கடுமையாக இருப்பதால் உயர் கல்வி பயலும் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள எனது நாடாளுமன்ற தொகுதியான ஈரோடு சிறந்த கல்வி மாவட்டமாக விளங்குவதால் இந்திய தொழில் நுட்ப நிறுவனம் T மற்றும் NIT போன்ற நிறுவனம் தமிழ்நாட்டின் மேற்கு மண்டலமான ஈரோட்டில் அமைத்து தர கோருகிறேன்.

வேகமாக வளர்ந்து வரும் ஈரோடு போன்ற நகரங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கி ஊக்கப்படுத்தும் தமிழ்நாடு அரசு கல்விக்கு தரும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் கல்வியில் வேகமாக வளர்ந்து வருவதால் இதுபோன்ற நகரங்களுக்கு தமிழ்நாட்டில் வா மற்றும் NIT போன்ற தொழில் நுட்ப நிறுவனம் அவசியமானதாக உள்ளது

தமிழ்நாடு போராடும்
தமிழ்நாடு வெல்லும்

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. கோரிக்கை விடுத்து பேசினார்.

## ஆர்க்காடு தொகுதி – வாழைப்பந்தல் கிராமத்தில் உள்ள மேனிலைப் பள்ளியில் பயிலும்

# பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி அமைத்திடுவீர்!

### சட்டப்பேரவையில் – ஜெ.எல்.ஈஸ்வரப்பன் கோரிக்கை !

சென்னை, ஏப். 5-
சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஜெ.எல்.ஈஸ்வரப்பன்:** ஆற்காடு தொகுதி, வாழைப்பந்தல் கிராமத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



ஆதரவற்ற மாணவர்கள் தங்களுடைய பள்ளிப் படிப்பை 18 வயது வரை தொடர மாதம் ரூ.2,000/ம் வழங்கும் தாயுமானவரை வணங்குகிறேன். 2,500 மாணவர்கள் பயிலும் ஆற்காடு அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், 1,500 மாணவிகள் பயிலும் திமிரி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், விளாப்பாக்கம், தாமரைப் பாக்கம் மற்றும் காவனூர் ஆகிய அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விடுதி அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்:** ஆற்காடு அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 2,503 மாணவிகளும், திமிரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1,084 மாணவிகளும், தாமரைப் பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 492 மாணவ, மாணவிகளும் பயின்று வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மாணவியர் விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். எனவே, துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, சாத்தியக் கூறுகள் இருப்பின், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப புதிய மாணவியர் விடுதியைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**ஜெ.எல்.ஈஸ்வரப்பன்:** வாலாஜா அறிஞர் அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் 4 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயிலுகின்றனர். ஆற்காடு மற்றும் ராணிப்பேட்டை ஆகிய தொகுதிகளிலுள்ள கிட்டத்தட்ட 150 கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் அந்தக் கல்லூரியில்தான் படிக்கிறார்கள். அங்கு 60 மாணவிகள் தங்கிப் பயிலும் வகையில், ALREADY ஒரு விடுதி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், 100 மாணவிகள் படிக்கிற அளவிற்கு அங்கு கட்டமைப்பு வசதிகள் இருக்கிற காரணத்தினால், அந்த 100 மாணவிகள் தங்கிப் படிக்கிற அளவிற்கு தரமுயர்த்தவும், மேலும் 50 மாணவிகள் தங்கிப் படிக்கும் அளவிற்கு புதிய கட்டடம் அமைத்துத் தரவும் அரசு முன்வருமா ?

**அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்:** முதலமைச்சர் அவர்களுடைய கல்வி மேம்பாட்டுத் திட்டங்களான, புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டங்களின் மூலமாக இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளின் சேர்க்கை என்பது மிகப் பெரிய அளவில் அதிகரித்திருக்கிறது. அந்த அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மட்டும் 19 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கி, தமிழ்நாட்டில் இருக்கிற கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இன்றைக்கு மிகப் பெரிய வாய்ப்பினை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டையில் இருக்கிற அறிஞர் அண்ணா அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கிட்டத்தட்ட 4,099 மாணவிகள் பயின்று வருகிறார்கள். இப்போது சிறுபான்மையினர் நலத் துறையின் மூலமாக ஒரு மாணவியர் விடுதியும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக ஒரு மாணவியர் விடுதியும் செயல்பட்டு வருகிறது.

கிட்டத்தட்ட இந்த கல்லூரியில் 2,500க்கும் மேற்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் பயின்று வருகிறார்கள். அவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இந்த ஆண்டு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, 100 மாணவிகள் பயன்பெறக்கூடிய அளவில் புதிதாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

# சீர்காழி தொகுதியில் - தொழிற் பயிற்சி நிலையம் அமைத்திடுவீர்!

### சட்டப்பேரவையில் – மு.பன்னீர்செல்வம் கோரிக்கை !

சென்னை, ஏப். 5-
சட்டப் பேரவையில் சீர்காழி தொகுதி கழக உறுப்பினர் மு.பன்னீர் செல்வம், “சீர்காழி தொகுதியில் - தொழிற் பயிற்சி நிலையம் அமைத்திட வேண்டும்’’ என வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**மு. பன்னீர்செல்வம்:** சீர்காழி தொகுதி என்பது ஒரு பெரிய அளவிலே வளர்ச்சி பெறாத தொகுதி ஆகும். விவசாயத் தொழில் மட்டும்தான்; அதுதவிர மாணவர்கள் நிறைய படிக்கிறார்கள். அவர்கள் 10 ஆம் வகுப்பு படித்து முடித்தவுடனேயே, சுய தொழில் துவங்க வேண்டுமென்றால், அவசியமான ஒரு தொழிற்பயிற்சி நிலையம் தேவை என்பதை உணர்ந்து, தொழிற்பயிற்சி நிலையத்தை புத்தூரிலே அமைத்துக்கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

**அமைச்சர் சி.வி.கணேசன்:** மயிலாடுதுறை மாவட்டத்தில் தற்போது 7 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

எனவே, மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தொகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவிலில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் இந்த ஆண்டு தொடங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். எனவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய ஊரிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, தற்போது சீர்காழியில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மு. பன்னீர்செல்வம்:** நான் ஏற்கெனவே சொன்னதுபோல, பெரிய அளவிலே வளர்ச்சி பெறாத தொகுதி ஆகும். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சீர்காழி தொகுதியினுடைய மாப்பிள்ளை; அதேபோல வேளாண்மைஉழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சீர்காழி தொகுதியினுடைய மாப்பிள்ளை; அதேபோல போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சீர்காழி தொகுதி உள்ளிட்ட மயிலாடுதுறை மாவட்டத்தினுடைய மாப்பிள்ளை; இத்தனை நபர்கள் இருந்தும் இந்த சீர்காழி தொகுதிக்கு ஒரு தொழிற்பயிற்சி நிலையம் கிடைக்கவில்லையென்றால், மக்கள் என்னை என்ன சொல்வார்கள்? எனவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, எனக்கு ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்க முன்வருவார்களா?



**அமைச்சர் சி.வி.கணேசன்:** நமது தமிழக முதல்வர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, தமிழ்நாட்டில் இருந்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்களினுடைய எண்ணிக்கை 90; 2021-2022 ஆம் ஆண்டில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டது. 2022-2023 ஆம் ஆண்டில் 11 தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன. 2024-2025 ஆம் ஆண்டில் 13 தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன. 2025-2026 ஆம் ஆண்டு நிதியாண்டில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவினை ஏற்று, நம்முடைய நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் 17 தொழிற்பயிற்சி நிலையங்களை இந்த ஆண்டு தொடங்குவதற்கு அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளவிரும்புகின்றேன். ஆக 2021-2022, 2022-2023, 2024-2025, 2025-2026 இந்த 4 ஆண்டுகளில் மட்டும் 42 தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இருப்பினும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மு. பன்னீர்செல்வம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அதுவும் மாப்பிள்ளை தொகுதி என்று சொன்னார்கள். ஆகவே, விரைவாக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, புதிய தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.